**செ. கு. எண்: 093** **நாள்: 17.06.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 17.6.2018

வேலூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், கல்நார்சம்பட்டி மற்றும் ராமநாய்க்கன்பேட்டை கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் 31 நபர்கள் ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், குப்பம் பகுதியில் மாங்காய் பறித்து விட்டு, தனியார் மினி லாரியில் வேலூர் மாவட்டத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது, 16.6.2018 அன்று சித்தூர் மாவட்டம், கங்குணி கிராமம், பெரும்பள்ளம் என்ற இடத்தில் லாரி கவிழ்ந்தது. இந்த விபத்தில் வேலூர் மாவட்டம், கல்நார்சம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரீசன் என்பவரின் மகன் திரு. சென்றாயன், திரு. சங்கர் என்பவரின் மனைவி திருமதி புனிதா, திரு. கண்ணன் என்பவரின் மனைவி திருமதி கமலா, திரு. சின்னதம்பி என்பவரின் மனைவி திருமதி செண்பகம், திரு. தீர்த்தகிரி என்பவரின் மனைவி திருமதி மீனாட்சி மற்றும் ராமநாய்க்கன்பேட்டையைச் சேர்ந்த திரு. சம்பத் என்பவரின் மகன் திரு. உமாபதி ஆகியோர் சம்பவ இடத்திலேயேயும்; திரு. சின்னதம்பி என்பவரின் மகன் திரு. துளசி, திரு மோகன் என்பவரின் மகன் திரு. முத்து, மற்றும் திரு. தருமன் என்பவரின் மகன் திரு நாராயணன் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஒன்பது நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் 22 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க வேலூர் மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்து குறித்து அறிந்தவுடன், இறந்தவர்களின் உடல்களை அடையாளம் கண்டு உடனடியாக தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வருவாய் துறையினர் மற்றும் காவல் துறையினர் கொண்ட குழு ஒன்றினை ஆந்திர மாநிலத்திற்கு உடனடியாக அனுப்ப நான் உத்தரவிட்டிருந்தேன். எனது உத்தரவின் பேரில், அதிகாரிகள் விரைவான நடவடிக்கை மேற்கொண்டதில், சித்தூர் மாவட்ட நிருவாகத்தின் உதவியுடன், இறந்தவர்களின் உடல்கள் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் கூறவும், காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் உயரிய சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யவும், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு. K.C வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருக்கு நான் உத்தரவிட்டேன்.

இந்த துயரச் சம்பவத்தின் தன்மையையும், இறந்தவர்களின் குடும்ப வறிய நிலையையும் கருத்தில் கொண்டு, உயிரிழந்த ஒன்பது நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/– ரூபாயும்; லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**